MAY 2022 **U/ID 30618/ULA2A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும்
30 சொற்களில் விடை தருக.

1. மு.வ.-வின் சென்னை அரசாங்கப் பரிசு பெற்ற நூல்கள் யாவை?

2. நட்பு குறித்து மு.வ.-வின் கருத்துக்களைக் குறிப்பிடுக.

3. மொழி என்றால் என்ன?

4. 'அகம்' என்ற சொல்லின் பொருள் தருக.

5. கட்டுரை - விளக்கம் தருக.

6. கட்டுரையின் மூன்று பிரிவுகளை எழுதுக.

7. மொழிபெயர்ப்பின் வரையறை யாது?

8. மொழிபெயர்ப்புக் கொள்கைகளை வகுத்தவர்களுள் இருவரைக் குறிப்பிடுக.

9. சோழர் காலத்தில் எழுந்த முக்கிய நூல்கள் இரண்டினைக் கூறுக.

10. சொக்கநாத நாயக்கரின் மனைவியின் பெயரைக் குறிப்பிடுக.

11. அறிஞர்களின் கடமைகளாக மு.வ. கூறுவன யாவை?

12. நேர்காணலில் செய்யக் கூடாதவைகளுள் இரண்டினைக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு
200 சொற்களில் விடை தருக.

13. மனைவிக்கு இருக்க வேண்டிய குணநலன்களாக மு.வ. கூறுவனவற்றை விளக்குக.

14. நேர்காணலின் பயன்களைக் குறிப்பிடுக.

15. கட்டுரை எழுதும் முறையை விளக்குக.

16. மொழி பெயர்ப்பியலில் பயன்படுத்தப்படும் உத்திகளை விளக்குக.

17. சோழர் காலத்தில் எழுந்த இலக்கண நூல்கள் சிலவற்றை விளக்கி வரைக.

18. செல்பேசி தொடர்புடைய கலைச் சொற்கள் குறித்து விளக்குக.

19. நாவல்களில் வெளிப்படும் மு.வ.-வின் சமுதாயச் சிந்தனைகளைக் குறிப்பிடுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு 500 சொற்களில் விடை தருக.

20. டாக்டர் மு. வரதராசனாரின் நாவல் பணி குறித்து விளக்கியுரைக்க.

21. நேர்காணல் என்றால் என்ன? அதன் வகைகளைத் தொகுத்துரைக்க.

22. கட்டுரையின் வகைகளை விவரிக்க.

23. மொழிபெயர்ப்பு உத்திகளை விளக்கிக் கட்டுரை வரைக.

24. சோழர் கால இலக்கியங்கள் குறித்து விளக்கியுரைக்க.

———————